## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.6)துறை

அரசாணை (நிலை) எண். 117 நாள். 09.12. 2022.

சுபகிருது ஆண்டு
கார்த்திகை 23-ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.114, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந6) துறை, நாள் 15.10.2009
2. அரசாணை (நிலை) எண்.15 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந6) துறை, நாள் 19.02.2010.
3. அரசாணை (நிலை) எண்.97 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந6) துறை, நாள் 26.08.2010.
4. அரசாணை (நிலை) எண்.106 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந6) துறை, நாள் 10.11.2011.
5. அரசாணை (நிலை) எண்.108 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந6) துறை, நாள் 23.12.2021.
6. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதம் ந. க. எண். ஏ3/8449/2022, நாள். 21.03.2022 மற்றும் 07.06.2022.

*********

## ஆணை.

2022 - 2023 ஆம் ஆண்டு வரவு செலவு கூட்டத்தொடரில் இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார் :-

"தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் மற்றும் பழங்குடியினர் நல வாரியம் ஆகிய வாரியங்களின் கீழ் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இது வரை

த.பியா.

வழங்கப்பட்டு வந்த இயற்கை மரண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் சுமார் 3,826 பயனாளிகள் பயன் பெறுவர்"

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு "தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்" அமைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், புதிரை வண்ணார் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்பவர்களுக்கும், அவர்களது குடும்பத்தாரர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்க ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், புதிரை வண்ணார் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்பவர்களுக்கும் அவர்களது குடும்பத்தாரர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்க மேலும் ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

5. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரிய உறுப்பினர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் முதியோர் ஓய்வூதியத்தை ரூ.500/- லிருந்து ரூ.1000/- ஆக உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

6. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில், "தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் கீழ் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சாந்தவர்களுக்கும், இதுவரை வழங்கப்பட்டு வந்த இயற்கை மரண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக ரூ.1.53 கோடி செலவில் உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

7. மேலே ஆறில் படிக்கப்பட்ட 21.03.2022 நாளிட்ட கடிதத்தில், அரசாணை (நிலை) எண்.15, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந6) துறை, நாள் 19.02.2010 -இல் ரூ.50/- இலட்சமும், அரசாணை (நிலை) எண்.97, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந6) துறை, நாள் 26.08.2010 -இல் ரூ.50/- இலட்சமும், ஆக மொத்தம் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொது வைப்புக் கணக்கில் வரவு வைத்து செலவு மேற்கொள்ளப்பட்டது எனவும்,

மேற்காணும் அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பானது 2017-18 வரை பயன்படுத்தாமல் இருந்ததன் காரணமாக 2018-2019 முதல் நீக்கப்பட்டுள்ளது எனவும், எனவே, இக்கருத்துருவிற்கு 2022-2023 நிதியாண்டிற்கு புதிய கணக்குத் தலைப்பினை உருவாக்கி ரூ.20,30,000/-ஐ நிதி ஒதுக்கீடு வழங்கவும், நலத்திட்ட உதவிகளை வழங்கிட நிருவாக அனுமதி வழங்குமாறும் ஆதிதிராவிடர் நல ஆணையர் கோரியுள்ளார்.

8. மேலும், ஆதிதிராவிடர் நல ஆணையர் தனது 07.06.2022 நாளிட்ட கடிதத்தில், அரசாணை (நிலை) எண்.108, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந6) துறை, நாள் 23.12.2021 -இல் "தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பணியிடத்தில் விபத்து / மரணம் / உறுப்புக்களை இழத்தல், இயற்கை மரணம், ஈமச்சடங்கு முதியோர் ஓய்வு ஊதியம், திருமண உதவித் தொகை, கல்வி உதவித்தொகை (இருபாலர்) ஆகிய நலத்திட்ட உதவித் தொகைகள் உயர்த்தி, தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது எனவும், அரசாணை (நிலை) எண்.106, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந6) துறை, நாள் 10.11.2011 -இல் தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரிய உறுப்பினர்களுக்கு முதியோர் ஓய்வுதியம் மட்டும் மே 2011 முதல் ரூ.500/- லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு, இதர நலத்திட்ட உதவிகள் 2010 முதல் தற்போது வரை வழங்கப்பட்டு வருகிறது எனவும் இதர வாரியங்களில் வழங்கப்படுவது போல் தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் இயற்கை மரண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகைகளை உயர்த்தி வழங்க பரிந்துரை செய்துள்ளார். மேலும், உயர்த்தி வழங்குவதால் அரசுக்கு தோராயமாக ரூ.20,30,000/- கூடுதல் செலவினம் ஏற்படும் எனவும் சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள 18 வயது முடிவடைந்த ஆனால் 60 வயது முடியாதவர் புதிரை வண்ணார் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய வேண்டும் என்றும் இவ்வாரியத்தில் இரட்டைப் பயன்கள் பெறுவதைத் தவிர்க்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கு முன் இதர நலத்திட்டங்களில் உறுப்பினர்களாக இல்லை என்பதனை உறுதி செய்த பின்னர் உறுப்பினர் பதிவிற்குறிய விண்ணப்பங்களை வழங்கவேண்டும் என்றும், கருத்துரு அனுப்பியுள்ளார்.

9. மேலே, பத்தி 7 மற்றும் 8 -இல் உள்ள, ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு, அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகைகளான, இயற்கை மரண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள்

...4

உயர்த்தி வழங்கியது போல் 3826 தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரிய உறுப்பினர்களுக்கும் இணைப்பு-I -இல் உள்ளவாறு உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

10. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அ.சா.குஎண். 3566/நிதித் (ஆதிமபந)துறை/ 2022, நாள். 05.12.2022 இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தென்காசி சு ஜவஹர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**பெறுநர்:-**

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-600 018.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-600 005.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை-600 018.
மாநில கணக்காயர், சென்னை- 600 009 / 18 / 35.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை-600 009.

**நகல்:-**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை – 600 009.
அமைச்சர் (ஆதிதிராவிடர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை-600 009.
நிதித்(ஆதி(ம)பந)வ.செ.பொ-I/வ.செ.பொ-II/வ.வ.I)துறை, சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5) துறை,
சென்னை- 600 009.
சிறப்பு திட்டம் செயலாக்கத் துறை, சென்னை - 600 009.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

கா. செல்வராணி 09/12/2022
பிரிவு அலுவலர்.
9/12/22

## இணைப்பு –I

## அரசாணை (நிலை) எண். 117, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.6)துறை, நாள்.09.12.2022

## தமிழ்நாடு புதிரைவண்ணார் நல வாரியத்தால் வழங்கப்படும் உதவித்தொகை உயர்த்தி வழங்குதல் - விவரம்

| வ. எண் | நலத்திட்டங்களின் பெயர் | தாட்கோ தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம் மூலம் வழங்கப்படும் தொகை (ரூ) | தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் | |
|---|---|---|---|---|
| | | | ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை (ரூ) | தற்போது உயர்த்தி வழங்கக் கோரும் தொகை (ரூ) |
| 1. | பணியிடத்தில் விபத்து / மரணம் உறுப்புகளை இழந்தால் / சரி செய்ய இயலாத அளவு இழத்தல் | 5,00,000/- | 1,00,000/- (விபத்து மரணம்) | 5,00,000/- |
| | ஒரு கையினை இழந்தால் | 1,00,000/- | 50,000/- | 1,00,000/- |
| | ஒரு காலினை இழந்தால் | 1,00,000/- | 50,000/- | 1,00,000/- |
| | ஒரு கண் முழுவதும் சரிசெய்ய முடியாத அளவு பார்வை இழப்பு | 1,00,000/- | 50,000/- | 1,00,000/- |
| | ஏனைய காயங்கள் ஏற்பட்டு முழு இயலாமைக்கு | 1,00,000/- | 25,000/- | 1,00,000/- |
| 2. | இயற்கை மரண உதவித் தொகை | 20,000/- | 15,000/- | 20,000/ |
| 3. | ஈமச்சடங்கு உதவி | 5,000/- | 2,000/- | 5,000/- |
| 4. | முதியோர் ஓய்வு ஊதியம் | 1,000/- | 1,000/- | 1,000/- |
| 5. | திருமண உதவித்தொகை தொழிலாளர் (அ) மகன் (அ) மகள் குடும்பத்திற்கு இரு முறை மட்டும்) | | | |
| | ஆண் | 3,000/- | 2,000/- | 3,000/- |
| | பெண் | 5,000/- | 2,000/- | 5,000/- |

த.பி.பா.

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | கல்வி உதவித்தொகை (இரு பாலர்) | | | |
| | முறையான பட்ட மேற்படிப்பு | 4,000/- | 2,000/- | 4,000/- |
| | விடுதியில் தங்கிப் படித்தால் | 5,000/- | 3,000/- | 5,000/- |
| | தொழில் நுட்ப பட்டப்படிப்பு | 4,000/- | 2,000/- | 4,000/- |
| | விடுதியில் தங்கிப் படித்தால் | 6,000/- | 4,000/- | 6,000/- |
| | தொழில்நுட்ப பட்ட மேற்படிப்பு | 6,000/- | 4,000/- | 6,000/- |
| | விடுதியில் தங்கிப் படித்தால் | 8,000/- | 6,000/- | 8,000/- |

தென்காசி சு ஜவஹர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

கி.ர. செல்வராணி
09/12/2022
பிரிவு அலுவலர்.
9/12/22

## இணைப்பு -II

**அரசாணை (நிலை) எண். 117, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.6)துறை, நாள்.09.12.2022**

தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் - உறுப்பினர்கள் விவரம்.

| வ.எண் | மாவட்டம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | அரியலூர் | 0 | 0 | 0 |
| 2. | காஞ்சிபுரம் | 0 | 0 | 0 |
| 3. | சென்னை | 43 | 2 | 45 |
| 4. | கோயம்புத்தூர் | 4 | 6 | 10 |
| 5. | கடலூர் | 38 | 35 | 73 |
| 6. | தர்மபுரி | 6 | 5 | 11 |
| 7. | திண்டுக்கல் | 96 | 65 | 161 |
| 8. | ஈரோடு | 0 | 0 | 0 |
| 9. | சேலம் | 0 | 0 | 0 |
| 10. | கன்னியாகுமரி | 0 | 0 | 0 |
| 11. | கரூர் | 4 | 6 | 10 |
| 12. | கிருஷ்ணகிரி | 0 | 0 | 0 |
| 13. | விழுப்புரம் | 2 | 2 | 4 |
| 14. | மதுரை | 98 | 90 | 188 |
| 15. | நாகப்பட்டினம் | 54 | 52 | 106 |
| 16. | நாமக்கல் | 0 | 0 | 0 |
| 17. | நீலகிரி | 63 | 69 | 132 |
| 18. | பெரம்பலூர் | 0 | 0 | 0 |
| 19. | புதுக்கோட்டை | 32 | 53 | 85 |
| 20. | இராமநாதபுரம் | 128 | 101 | 229 |
| 21. | வேலூர் | 97 | 83 | 180 |
| 22. | சிவகங்கை | 52 | 41 | 93 |
| 23. | தஞ்சாவூர் | 0 | 0 | 0 |
| 24. | தேனி | 261 | 274 | 535 |
| 25. | திருப்பூர் | 0 | 0 | 0 |

த.பி.பா.

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | திருவள்ளூர் | 52 | 45 | 97 |
| 27. | திருவாரூர் | 6 | 6 | 12 |
| 28. | தூத்துக்குடி | 607 | 562 | 1169 |
| 29. | திருச்சி | 55 | 59 | 114 |
| 30. | திருநெல்வேலி | 113 | 89 | 202 |
| 31. | திருவண்ணாமலை | 0 | 0 | 0 |
| 32 | விருதுநகர் | 201 | 169 | 370 |
| | மொத்தம் | 2012 | 1814 | 3826 |

தென்காசி சு ஜவஹர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

கா. செல்வராணி
09/12/2022
பிரிவு அலுவலர்.
9/12/22